அசல் வழக்கு எண்.58/2020 வா.சா.3 கார்மேகம் த/பெ வெங்கடாசலம்

**<u>02.04.2024 - 1 முதல் 3ம் பிரதிவாதித்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் ஆகாரம்., என் அம்மா ஆகாரத்தில் குடியேறியதால் 35 வருடங்களாக அங்கேயே வசித்து வருகிறோம். எனக்கு சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. அந்த சொத்து நான் கிரயம் வாங்கியது அல்ல என் அப்பா மூலமாக வந்த சொத்தாகும்.

2. என் சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியாது. வாதி நீலகண்டனை எனக்கு தெரியும். நீலகண்டனின் அப்பா சொத்துக்களை தனது மகள்கள் பெயரில் எழுதி வைத்துவிட்டதால் அது சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குதான் இந்த வழக்கு என்றால் சரிதான்.

3,. வழக்கு சொத்தினை என் அப்பா 2003ல் கிரயம் வாங்கினார் அவர் வாங்கிய கிரயம் அவரது மகளுக்கு தெரியாது. வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் வாங்கப்பட்ட சொத்தின் சர்வே நெம்பர் எனக்கு தெரியாது. அந்த கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போட்டேனா என்றால் இல்லை.

4. வாதி தான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். அன்றிலிருந்து வாதி தனியாக தான் இருந்து வருகிறார் என்றும், அவரது அப்பா அம்மாவும் தனியாகதான் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வரவிரல்லை வாதி நீலகண்டன் கேட்டு கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

5. வாதி என் உறவினர் என்றால் சரிதான். வாதி திருமணம் செய்து கொண்ட ராஜகுமாரி என் தம்பியின் உறவினர் ஆவார். என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் என் வழக்கறிஞர் சொல்ல சொன்னதன் பேரில் தான் சொன்னேன். வழக்கு சொத்து பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் ஆனால் சொல்ல தெரியவில்லை.

6. வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் வாதியும் அழைத்தார் ஊர் தலைவர் சாட்சி சொல்லிவிட்டு வருமாறு என்னிடம் சொன்னார். ஊர் தலைவரும் இதற்கு முன்னர் சாட்சியம் அளித்ததாகவும் என்னிடம் சொல்லி உள்ளார். வழக்குபற்றி எந்தவிவரமும் தெரியாது என்றும் நீலகண்டன் சொன்னதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.